பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 11 2024 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு ஆறு நாள் பயணமாக இன்று புறப்படுகிறார்.
2. ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பையும் உறுதி செய்வதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மறுநாள் நிறைவடைய உள்ள நிலையில், பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.
4. உத்திர பிரதேச மாநிலம் ஜான்சியில் அரசு மருத்துவமனையில் மருத்துவமனையில் நேரிட்ட தீ விபத்தில் பச்சிளம் குழந்தைகள் பத்து பேர் உயிரிழந்தனர்.
5. ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு ஆறு நாள் பயணமாக இன்று புறப்படுகிறார்.

முதல் கட்டமாக நைஜீரியா அதிபர் திரு போலோ அகமது தினாபு அழைப்பின் பேரில் அந்நாட்டிற்குச் செல்கிறார்.

கடந்த 17 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் நைஜீரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

தமது பயணத்தின்போது இந்தியா – நைஜீரியா இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், உத்திசார் ஒத்துழைப்பு தொடர்பாகவும் அந்நாட்டு தலைவர்களுடன் பிரதமர் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

நைஜீரியா 2007-ஆம் ஆண்டு முதல் இந்தியாவுடன் மிகவும் நெருங்கிய நட்பு கொண்ட நாடாகவும், பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு ஆகிய துறைகளில் கூட்டாகவும் செயல்பட்டு வருகிறது.

நைஜீரியாவில் 200-க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் 27 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடுகள் செய்துள்ளன.

நைஜீரியாவில் இந்திய சமூகத்தினரையும் சந்தித்து திரு நரேந்திரமோடி கலந்துரையாடவுள்ளார்.

தமது பயணத்தின் இரண்டாவது கட்டமாக இம்மாதம் 18, 19 தேதிகளில் பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நடைபெறவுள்ள

ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் சர்வதேச விவகாரங்களில் இந்தியா நிலைப்பாட்டை பிரதமர் எடுத்துரைக்கவுள்ளார்.

உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

தமது பயணத்தின் கடைசி கட்டமாக இம்மாதம் 19-ஆம் கயானா செல்லும் பிரதமர், அந்நாட்டு தலைவர்களை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்துகிறார்.

கயானா நாடாளுமன்றத்திலும் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் கயானா செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மிகப்பெரிய அளவில் சேமிப்பை நிர்வகிப்பதோடு, தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பையும் உறுதி செய்வதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த நிறுவனத்தின் 72-வது நிறுவன நாள் விழாவில் பேசிய அவர், வருங்கால வைப்பு நிதி நிறுவன அதிகாரிகளும், ஊழியர்களும் கடமை உணர்வுடனும், செயல்திறன்மிக்க வகையிலும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்க இந்த நிறுவனம் ஆற்றி வரும் சிறந்த பங்களிப்பையும் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு விருதுகளையும் அமைச்சர் வழங்கினார்.

**[]<<<>>>[]**

மத்தியில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு அமைந்த பின்னர் வடகிழக்கு மாநிலங்களுக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடு நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

திரிபுரா மாநிலம் அகர்தலாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய காங்கிரஸ் தலைமையிலான அரசு ஆண்டு ஒன்றுக்கு இம்மாநிலங்களுக்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்ததாகவும், தற்போதுள்ள மத்திய அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் கூறினார்.

வடகிழக்கு பகுதியில் உள்ள மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு அனைத்து வகையிலும் உறுதுணையாக இரப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரிபுராவில் பிஜேபி தலைமையிலான அரசு அமைந்த பின்னர், மாநிலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சியை கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக தனிநபர் வருமானம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் திரு ஜோதி ஆதித்ய சிந்தியா கூறினார்.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநிலம் குர்கிராமில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 700 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு ஸ்ரீ குருநானக் தேவ் என பெயர் சூட்டப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

நேற்று பஞ்ச்குலாவில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான நிதி உதவியை வழங்கி பேசிய அவர், விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க தமது அரசு பாடுபட்டு வருவதாகக் கூறினார்.

மண்ணின் வளத்தை விவசாயிகள் தெரிந்து கொண்டு அதற்கேற்ப சாகுபடி செய்யும் வகையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை மாநிலத்தில் 40 லட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக திரு நயாப் சிங் சைனி கூறியுள்ளார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் வரும் திங்கட்கிழமை நிறைவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா நேற்று தானேயில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு அமைந்த பின்னர் பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் சாதனை புரிந்துள்ளதாகக் கூறினார்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தங்கள் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், வார்தா – நான்டெட் ரயில்வே திட்டம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

மாநிலத்தில் பாசன வசதியை அதிகரிக்க நதிநீர் இணைப்பு திட்டத்துடன் பென்கங்கா நதி இணைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாக்பூர் - மும்பை அதி விரைவுச் சாலை, உமர்கெத் வரை நீட்டிக்கப்படும் என்றும் திரு அமித்ஷா கூறினார்.

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவைச் சேர்ந்த வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் திரு சரத்பவார் நேற்று சாங்லியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அரசியல் சாசனத்தை பிஜேபி அரசு மாற்றியமைக்க முயற்சிப்பதாக குற்றம்சாட்டினார்.

இந்த கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ரமேஷ் சென்னிதாலா, சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து பிஜேபி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சிவசேனா கட்சியின் தலைவர் திரு உத்தவ்தாக்ரே பேசுகையில், மகாராஷ்டிராவில் பிஜேபி கூட்டணி அரசு சோயாபின்ஸ் பயறு வகைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்க தவறிவிட்டதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு இடங்களில் தீவிர வாகன சோதனை நடத்தி வருகிறது.

நேற்று சத்ரபதி சம்பாஜ் நகரில் நடத்திய சோதனையின்போது 19 கோடி ரூபாய் மதிப்பிலான 19 கிலோ தங்கம், 37 கிலோ வெள்ளி பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் இம்மாதம் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனிடையே ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளிலும் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இம்மாநிலத்தில் இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு வரும் 20-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

உத்திர பிரதேச மாநிலம் ஜான்சியில் அரசு மருத்துவக் கல்ரி மருத்துவமனையில் நேற்று நேரிட்ட தீ விபத்தில் பச்சிளம் குழந்தைகள் பத்து பேர் உயிரிழந்தனர்.

இந்த மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய பிரிவில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக மாவட்ட ஆட்சியர் திரு அவிநாஷ் குமார் தெரிவித்தார்.

தீ விபத்து ஏற்பட்டபோது 54 பச்சிளம் குழந்தைகள் அந்த வார்டில் இருந்ததாகவும், ஊழியர்கள் மற்றும் செவிலியர்கள், விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டதால் பல குழந்தைகள் மீட்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த உத்திர பிரதேச மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உதத்ரவிட்டுள்ளார்.

குழந்தைகளை இழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கரையும் அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பீகார் மாநிலம் **Jamui-**ல் நேற்று நடைபெற்ற பழங்குடியின தலைவர் பகவான் பிர்ஸா முண்டாவின் 150-வது பிறந்த நாள் விழாவையொட்டி கண்காட்சி நடைபெற்றது.

இந்த கண்காட்சியை பார்வையிட்ட பிரதமர் திரு நரேந்திரமோடி, தமிழகத்தில் அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தைச் சேர்ந்த எழிலரசி என்ற பழங்குடியின பெண்ணின் உணவுப் பொருள் அரங்கில் இருந்த தயாரிப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

மக்களிடையே இந்த பொருட்களுக்கு உள்ள வரவேற்பு குறித்து பிரதமரிடம் தாங்கள் விளக்கியதாகவும், உள்ளூரில் கிடைக்கும் முந்திரியை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதாக தெரிவித்ததாக எழிரசி கூறினார்.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

பீகாரில் நடைபெற்று வரும் இப்போட்டி மாலை மணி 4-45-க்கு தொடங்குகிறது,

முன்னதாக நடைபெறும் ஆட்டங்களில் மலேசியா - ஜப்பானையும், தென்கொரியா – தாய்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான நான்காவது மற்றும் இறுதி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 135 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஜொகனஸ்பெர்க்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்திய நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 283 ரன் எடுத்தது.

தொடக்க ஆட்டக்காரர் சஞ்ஜு சாம்சன் 56 பந்துகளில் 109 ரன்னும், திலக் வர்மா 47 பந்துகளில் 107 ரன்னும் அடித்தனர்.

284 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 18 புள்ளி இரண்டு ஓவரில் 148 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நான்கு போட்டிகளை இந்த தொடரில் இந்தியா மூன்றுக்கு – ஒன்று என்ற ஆட்டக்கணக்கில் தொடரை வென்றது.

***End of News***